A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 95 / 2021**

திரு. M. சுப்பிரமணியன்,
தீப்தி பினிஷர்ஸ்,
257/2, குளத்துப்புதூர் (குளத்துக்கடை),
ஆரம்பப்பள்ளி எதிரில், மங்களம் ரோடு,
ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 687. ………மேல்முறையீட்டாளர்
(திரு. M. சுப்பிரமணியன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
EB அலுவலக வளாகம், குமார் நகர்,
அவிநாசி ரோடு, திருப்பூர் – 641 603.

2. உதவி செயற்பொறியாளர்/வீரபாண்டி,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV வீரபாண்டி SS வளாகம்,
திருப்பூர் – 641 605. ...... எதிர்மனுதாரர்கள்
(திரு V. சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்/ திருப்பூர்
திரு S.D. டானிஷ் வேனு, உதவி செயற்பொறியாளர்/வீரபாண்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 21-12-2021**

**கேட்புரை நாள்: 17-02-2022**

**ஆணை நாள்: 11-03-2022**

21.12.2021 அன்று பெறப்பட்ட திரு. M. சுப்பிரமணியன், தீப்தி பினிஷர்ஸ், 257/2, குளத்துப்புதூர் (குளத்துக்கடை), ஆரம்பப்பள்ளி எதிரில், மங்களம் ரோடு, ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 687 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 95/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது

மின்குறைதீப்பாளரின் கேட்புரை 17.02.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் உயரழுத்த மின் இணைப்பு எண் 039094380652 இல் செலுத்திய கூடுதல் தொகையை திருப்பித் தர வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் உயரழுத்த மின் இணைப்பில் 500 KVA அனுமதிக்கப்பட்ட மின் பளு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்ததாகவும், மின் இணைப்பு கொடுக்கும் முன்பே கட்டணம் செலுத்த கோரி அறிவிப்பு கடிதம் பெறப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேலும் அறிவிப்பு கடிதத்தில் தெரிவித்திருந்த தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தியதாகவும், ஆனால் அரசு அறிவித்த ஊரடங்கு காலத்தில் ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு நீதிமன்ற உத்தரவு படி 20% செலுத்தும்படி தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டாளர் ரூபாய் 90,000/– மட்டுமே செலுத்த வேண்டுமெனவும், ஏற்கனவே செலுத்தியுள்ள கூடுதல் தொகையில் ரூபாய் 90,000/– கழித்து மீதத் தொகையை திரும்ப அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், திருப்பூர் மின் பகிர்மான வட்டத்தை 20.03.2021 அன்று அனுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பூர் மின்பகிர்மான வட்டம் 06.07.2021 அன்று விசாரணை நடத்தி தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருப்பூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 06.07.2021 அன்று விசாரணை நடத்தி தன்னுடைய தீர்வை தேதியில்லா ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"<u>தீர்ப்புரை:</u>*
>
> *நுகர்வோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க புதிய மின் இணைப்பு (HT service) பெற குறைந்தபட்ச மாதாந்திர மின் கட்டணம் ரூ.4,90,000/- செலுத்தியதை திருப்பித் தர வாரிய விதி இல்லை. ஆகையால் இது சம்மந்தமான தலைமையிடமிருந்து 10.11.21 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகையால் தங்களது கோரிக்கையினை தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி ஏற்று கொள்ள இயலாது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.02.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. ம. சுப்பிரமணியன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு V. சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்/ திருப்பூர் மற்றும் திரு S.D. டானிஷ் வேனு, உதவி செயற்பொறியாளர்/வீரபாண்டி, திருப்பூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 சென்ற வருடம் 24.3.2020 முதல் 31.5.2020 வரை Covid 19 காரணமாக ஊரங்கு இருந்ததாகவும், மேற்படி ஊரடங்கு காலத்தில் கட்டுமான பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் எதுவும் வாங்க முடியாத காரணத்தால் எந்த ஒரு பணியும் செய்ய முடியவில்லை எனவும், ஆனால் மின் இணைப்பு கொடுக்கும் முன்பே பணம் செலுத்த கோரி Demand Notice – SE/TEDC/TPR/AEE/GL/AE/G12/F.DEEPTHY/D320/20 DT. 24.3.2020 அனுப்பியிருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்கொண்டு தாமதம் செய்ய வேண்டாம் என்றும் மின்வாரியம் கூறும் குறைந்தபட்ச கட்டணத்தை under protest செலுத்துவதாக முடிவு செய்ததாகவும், அதன்படி ரூபாய் 4,90,000/– க்கு Tirupur Federal Bank வரைவோலை (27392668 dt. 12.6.2020) வழங்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அரசு அறிவித்த ஊரடங்கு காலத்தில் ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு கோர்ட் ஆர்டர் படி 20% மட்டுமே செலுத்தும்படி கூறியதாகவும், ஆனால் நாங்கள் மின்னிணைப்பு பெறாமலேயே முழுத் தொகையும் செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதை கருத்தில் கொண்டு தான் செலுத்திய முழு தொகையை வருங்கால மின் கட்டணத்தில் கழித்து அல்லது தங்களுக்கு திரும்பப் பெற்றுத் தருமாறு வேண்டி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் திருப்பூர் மின் பகிர்மான வட்டம் பெருமாநல்லூர் ரோடு, திருப்பூர் 641603 அவர்களுக்கு 06.07.2021 அன்று மனு அளித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மன்றத்தின் தீர்ப்பு தங்களுக்கு மிகவும் அதிர்ச்சியளிப்பதாகவும் தாங்கள் கட்டிய கூடுதல் கட்டணம் தங்களிடம் இருந்தால் பணி மூலதனத்திற்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் அவர்கள் அனுப்பிய தீர்ப்பை மேல்முறையீடு செய்ய தங்களின் முகவரியை தங்களுக்கு தெரியப்படுத்தி இருந்ததாகவும், இக்கடிதத்தின் மூலம் தங்கள் நிறுவனம் தங்களுக்கு மீண்டும் நினைவு கூறுவது ஊரடங்கு காலத்தில் கோர்ட் ஆர்டர் படி 20% மட்டுமே செலுத்தும்படி கூறியிருந்ததாகவும், அதன்படி பார்த்தால் தாங்கள் ரூ.90,000/- தான் செலுத்தியிருக்க வேண்டும், ஆனால் தாங்கள் மின்னிணைப்பு பெறாமலேயே மின்வாரியம் கூறிய கட்டணம் ரூ.4,90,000/- செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே மேல்முறையீட்டாளர் செலுத்திய கூடுதல் தொகையை திருப்பித் தர வேண்டி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 The Respondent has stated that M/s.Deepthy Finishers, 257/2, Kulothupudhur (Kulathukadai), Mangalam Road, Andipalayam (Po), Tirupur has applied for HT Service connection for a Sanction Demand of 500KVA through Online application on 27.09.2019. After field inspection the application was registered on 11.11.2019 with registration number 03043801112. Load sanction was accorded on 24.02.2020 and then consumer paid development Charges on 25.02.2020. Necessary extension works were completed and first 3 months supply availability notice was issued on 24.03.2020 with a request to produce safety certificate, execute test report and avail demand of 500KVA within the date of expiry of first 3 months notice period on 21.06.2020.

6.2 The Respondent has stated that M/s.Deepthy Finishers has reported that they were not able to get safety certificate due to Lockdown for Covid-19 and requested to waive the levy of monthly minimum charges from 24.03.2020 to 19.07.2020. The Consumer produced safety certificate on 11.06.2020 and monthly minimum notice issued on 12.06.2020 for 84 days i.e., 24.03.2020 to 15.06.2020 for Rs.4,90,000/-. The consumer paid monthly minimum charges on 12.06.2020 and clearance issued on 12.06.2020. The new HT Supply to M/s.Deepthty Finishers was effected on 15.06.2020 with HTSc No.652. The consumer request was addressed to The Chief Enqineer/Distribution/Coimbatore on 27.5.2020.

6.3 The Respondent has stated that in the meantime the consumer represented through CGRF and the consumer representation was addressed to The Chief Engineer / Commercial / Chennai after completion of hearing in CGRF. Reply was received from The Chief Engineer / Commercial directing to take action as per the provision in TNE Codes and Regulations and instructions issued time to time in this regard. As per the TNE Code 31 (2),(4) & (5), the consumer was issued Supply Availability notice and after producing safety certificate monthly minimum was levied.

6.4 The Respondent has stated that during Lockdown period from 24.03.2020 to 31.05.2020 for closed companies, there is a direction to collect the 90% of the demand charges. Some of the HT Consumers addressed to TNERC saying that TNEB is instructing not to run the industries. So TNERC gave an order for 20% demand charges as suo-moto. TNEB moved to court and judgement is in favour of HT Consumer for payment of 20% of demand charges as monthly minimum. Hence, the above order is for existing consumers and there is no specific instruction for waiver of monthly minimum charges while effecting new services. So the consumer representation for 20% monthly minimum charges as per court order could not be considered.

**7.0 <u>எதிர்மனுதாரர் வழங்கிய பதிலுரைக்கு மேல்முறையீட்டாளரின் பதில்</u>:**

7.1 எதிர்மனுதாரர் கூறியவாறு தமிழ்நாடு மின்சார வாரியம் திருப்பூர், தங்களை மிகுந்த மன உளைச்சல் உண்டாக்கி ரூ.4,90,000/- கட்டினால் மட்டுமே தங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று கூறியதால் மேல்முறையீட்டாளர் அத்தொகையை மிகுந்த சிரமத்திற்கு இடையில் செலுத்த வேண்டிய சூழ்நிலை உண்டானதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.2 சென்ற வருடம் 24.3.2020 முதல் 31.5.2020 வரை Covid 19 காரணமாக ஊரடங்கு இருந்தது, மேல்முறையீட்டாளர் பணிகள் அனைத்தும் முடித்து வைத்த இருந்ததாகவும், Safety certificate மட்டும் வாங்கவில்லை எனவும், ஊரடங்கு காலத்தில் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு கொடுத்திருக்க முடியாது என்பது தங்களுக்கும் தெரியும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் 1.6.2020 அன்று safety certificate வேண்டி விண்ணப்பித்து இருந்ததாகவும், மின்வாரியம் 10.6.2020 அன்று மேல்முறையீட்டாளருக்கு safety certificate அளித்திருந்ததாகவும், மேலும் 15.6.2020 அன்று தான் மேல்முறையீட்டாளருக்கு புதிய HT மின் இணைப்பு கொடுத்ததாகவும், அதற்கு உண்டான தங்களது முதல் மாத HT ரசீதை சமர்ப்பித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 Covid 19 ஊரடங்கு காரணமாக எங்களது நிறுவனத்தில் 23.3.2020 அன்று அனைத்து வேலைகளையும் நிறுத்தி விட்டதாகவும், தங்களுடைய நிறுவனத்தில் கடைசி Sales bill No.30631–23–3–2020 அனைத்தையும் பார்வைக்கு இணைத்துள்ளதாகவும், மேலும் ஊரடங்கு காரணமாக ஏப்ரல் மற்றும் மே மாத இரண்டு மாதங்கள் முழுவதும் தங்களது நிறுவனம் இயங்காமல் 1.6.2020 அன்றிலிருந்து இயங்க தொடங்கியதாகவும், 1.6.2020 அன்று புதுக் கணக்கு தொடங்கப்பட்டு Sales bill No.101 என ஆரம்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 தங்களது நிறுவனத்தின் கடைசி தேதி 23.3.2020 அறிக்கையும், மீண்டும் நிறுவனம் தொடங்கப்பட்ட தேதி 1.6.2020 அறிக்கையையும், அரசு உத்தரவின்படி 17.5.2020 அன்று ஊரடங்கும் முடியும்போது 50% தொழிலாளர்களை வைத்த நிறுவனத்தை இயக்கலாம் என அறிவித்ததாகவும், ஆனால் திருப்பூரில் உள்ள அனைத்து தொழிலாளர்களும் சொந்த ஊருக்கு சென்று விட்டதால் எந்த ஒரு நிறுவனத்தையும் இயக்க இயலவில்லை எனவும், அனைத்து நிறுவனங்களிலும் இயந்திர பழுது பார்க்கும் பணி மட்டுமே நடைபெற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 இதன் மூலம் அரசு அறிவித்த ஊரடங்கு காலத்தில் ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு கோர்ட் ஆர்டர் படி 20% மட்டுமே செலுத்தும்படி கூறியுள்ளதாகவும், ஆனால் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு பெறாமலேயே முழுத்தொகையும் செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 அரசாங்க உத்தரவின்படி ஊரடங்கு காலம் முடிவடையும் 31.5.2020 தேதியிலிருந்து தங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்ட தேதி 15.6.2020 வரை

**மின்வாரியம் அறிவித்த மினிமம் 20% தொகையை செலுத்த தயாராக உள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் செலுத்திய ரூ.4,90,000/- இருந்து மேற்படி தொகையை கழித்துக் கொண்டு மீதித் தொகையை திருப்பித் தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.**

**8.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

**8.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.**

8.2 மேல்முறையீட்டாளருக்கு கடந்த 24.03.2020 அன்று மேற்பார்வை பொறியாளர், திருப்பூர் அவர்களிடமிருந்து மின்வழங்கல் தரப்பட ஆயத்தமென (Supply availability notice) அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மின் வினியோக விதி 31(2)ன் படி, மின் நுகர்வோர் அவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 3 மாத காலத்திற்குள் காப்புவிதிகளுக்கான சான்றுடன் (Safety certificate) மின் இணைப்பினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் மின் இணைப்பு பெறும் வரையிலான அந்த இடைப்பட்ட காலத்திற்கு கீழ்க்கண்ட மின் வினியோக விதி 31(5)-ன்படி மாத சிறும மின் கட்டணத்தையும் செலுத்தவேண்டும்.

> ***"31. ஆய்வும் சோதிப்பும் மின்வழங்கல் தரலும்***
> *(5) கோரும் நுகர்வோர் மின்வழங்கல் கிடைத்தலுக்கான காலதத்துக்குள் மின் வழங்கலைப் பெற்றுக்கொண்டால், மின் வழங்கல் கிடைத்தலுக்கான முதல் அறிவிப்பு தேதியிலிருந்து மின் வழங்கலைப் பெற்ற தேதிவரையிலான காலத்துக்கு அறிவிப்பு செய்யப்பட்ட கட்டணவீதத்தில் மாதச்சிறுமக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்."*

8.3 மேல்முறையீட்டாளர் தனது வாதத்தில் கடந்த 24.3.2020 அன்று தனக்கு மின்வழங்கல் தரப்பட ஆயத்தமென (Supply availability notice) அறிவிப்பு வழங்கப்பட்டபோதும் அன்றைய தினத்திலிருந்தே இந்திய அரசு மற்றும் தமிழக அரசின் ஆணையின் படி கோவிட்-19 காரணமாக ஊரடங்கு விதிக்கப்பட்டதால் தன்னால் எந்தவொரு பணியும் மேற்கொள்ள இயலவில்லை எனவும் Safety certificate-ம் பெற இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

8.4 இருப்பினும் இடைப்பட்ட காலத்தில் மேல்முறையீட்டாளர் தனது கட்டுமான மற்றும் இதர பணிகள் முடித்து, Safety certificate-ம் பெற்று 10.6.2020 அன்று மேற்பார்வை பொறியாளரிடம் சமர்பித்துள்ளார். அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் 12.06.2020 அன்று அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து இடைப்பட்ட காலத்திற்கான மாத சிறும மின்கட்டணம் ரூ.4,90,000 செலுத்துமாறு கோரியுள்ளார். மேல்முறையீட்டாளரும் 12.6.2020 அன்றைய தினமே ஆட்சேபனையுடன் (Under protest), தான் அத்தொகையை செலுத்தியதாக தெரிவித்துள்ளார்.

8.5 மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டில் உயர்நீதிமன்ற ஆணையின்படி, மின் இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு 20 சதவீதம் மட்டுமே செலுத்தும்படி கூறியுள்ளபோதும் தனக்கு எதிர்மனுதாரர் மின் இணைப்பு வழங்குவதற்கு முன்னதாகவே முழுத்தொகையையும் செலுத்துமாறு கோரி பெற்றுள்ளதாகவும் தெரிவித்து, தான் நீதிமன்ற ஆணையின்படி 20 சதவீதமாகிய ரூ.90,000 மட்டுமே செலுத்தியிருக்கவேண்டிய நிலையில் ரூ.4,90,000 செலுத்தியுள்ளதால் தனக்கு கூடுதலாக செலுத்திய தொகையை திருப்பித்தருமாறு கோரியுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் மேற்கண்ட உயர்நீதிமன்ற ஆணை புதிய மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரருக்கு பொருந்தாது எனவும் அது ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனக்கூறி மறுத்துள்ளார்.

8.6 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தனது Suo Motu Proceedings No.2 of 2020, நாள் 4-5-2020-ல் தமிழக அரசால் விதிக்கப்பட்டுள்ள கோவிட்-19ன் ஊரடங்கு காலத்திற்கு வழங்கல் விதி 6(b) அடிப்படையில் உயர் அழுத்த மின்னிணைப்புகளில் 20 சதவீதம் மட்டுமே விதிக்கப்படவேண்டுமென கூறியுள்ளது.

விதி 6(b) கீழ்வருமாறு -

*6. சிறுமக் கட்டணங்கள் (Minimum charges)*

*நுகர்வோர், உரிமைதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டியேயாக வேண்டும்.*

*a) உரிமம்தாரரின் துண்டிப்புக்கான உரிமைப்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கி.வோ.ஆ. அளவில் உள்ள மின் தேவையின் அடிப்படையில் பின்வருமாறு விதித்து வசூலிக்க வேண்டும்.*

*(i) துண்டிப்பு ஒரு முழு மாதமானால் மின் தேவையில் 20 விழுக்காடு*

*(ii) துண்டிப்பு மாதப் பகுதியாக இருந்தால் உண்மையாகப் பதிவான மின்தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவை அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அது,*

*b) நுகர்வோரின் வேண்டுதலின்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கணக்கிட கருத வேண்டிய கி.வோ.ஆ அளவில் உள்ள மின்தேவை, உண்மையில் நடப்பில் பதிவான கி.வோ.ஆ அளவு மின்தேவை, (துண்டிப்புக் காலம் மாதப் பகுதியாக இருக்கும்போது) ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதுவாகும்.*

*உரிமதாரரின் நிறுவனத்தில் கதவடைப்பு, வேலைநிறுத்தம், தீ, புயல், வெள்ளப்பெருக்கு மற்றும் பிற உரிமதாரரின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் உரிமதாரர் மின்சாரம் தர இயலாத நிலையில் இருந்தாலோ அல்லது அவற்றைப் போன்ற காரணங்களால் நுகர்வோர் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியளவு மட்டுமோ*

*மின்சாரம் நுகர்வதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளாரென உரிமதாரர் நிறைவடைந்திருந்தாலோ, பட்டியலிடத் தக்க மின் தேவையின் 20 விழுக்காடு அல்லது பதிவான மின்தேவை இவற்றில் எது அதிகமோ அதற்கு உரிமதாரர் நுகர்வோரிடமிருந்து உண்மையில் நடப்பில் நுகர்ந்த மின்சாரக் கட்டணத்தோடு மாதச் சிறுமக் கட்டணத்தையும் வசூலிக்கலாம் என விதிக்கப்படுகிறது."*

மேற்கண்ட மின்வழங்கல் தரப்பட ஆயத்தமென (Supply availability notice) அறிவிப்பு காலத்தில் சிறும கட்டணத்தை செலுத்திட விண்ணப்பதாரர் கடமைப்பட்டவர் என்பதாலும், அதேபோல் கோவிட்-19 ஊரடங்கு காலத்தில் அரசின ஆணை 244 நாள் 17.5.2020-ன் படி எந்தவொரு பணியும் அரசு நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைகளில் மேற்கொள்ள முழுதடை விதிக்கப்பட்ட காலமான 25.3.2020 முதல் 17.5.2020 வரையிலான காலம் என்பதால் வழங்கல் விதி 6(b)ன் படி மாத சிறும கட்டணம் விதிப்பது என்பதே சரியாகும்.

8.7. மின் இணைப்பு ஏற்கனவே பெற்றவர்கள் மற்றும் Supply availability notice காலத்தில் உள்ள விண்ணப்பதாரர்கள் ஆகிய இருவேரு சூழ்நிலையிலும் மாத சிறும கட்டணம் என்பது செலுத்தப்படவேண்டும் என்பதை மேற்கண்ட விதிகளின் மூலம் அறியமுடிகிறது. Supply availability notice வழங்கிய அன்றே மின்சாரத்தையும் வழங்கிட த.நா.மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தயாராக உள்ளது, அதனால் அன்றைய தினத்திலிருந்தே மாத சிறும கட்டணத்தினை விதிக்க வழிவகை செய்யப்பட்டடுள்ளது. ஆகையால் த.நா.மின் வினியோக விதி 31(5) மற்றும் த.நா.மின் வழங்கல் விதி 6 ஆகிய இரண்டின்படியும் அச்சிறும கட்டணத்ததை செலுத்திட விண்ணபதாரர் கடமைப்பபட்டவராவார்.

8.8. சென்னை உயர்நீதி மன்றம், வழக்கு எண். WP.No.7678 & others நாள்.14.8.2020 ஆணையில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

> *"45 a) TANGEDCO shall issue a revised bill to the petitioners by applying Regulation 6(b) of the Supply code for the entire period when the establishment was under shut down; ……..*
>
> *f) These directions will apply only for the period during which the establishment was under total lockdown due to the orders issued by the Government and it is made clear that it pertains only to the Minimum charges payable under Regulation 6(b) of the Supply code and there is no exemption or concession insofar as the charges payable for the actual consumption of electricity (Energy charges); and"*

8.9 இந்திய அரசின் நிதித்துறை இப்பெருந்தொற்று காலத்தினை "Force Majeure" காலமாக கருத ஆணையிட்டுள்ளது. ஆகையால் உயர் அழுத்த மின்னிணைப்பு கோரும் விண்ணப்பதாரர் உலகளாவிய கோவிட் காரணமான ஊரடங்கின் காலமான "Force Majeure"-னால் எந்த பாதிப்பிற்கும் உள்ளாகாததாக கருதி மின் இணைப்பு பெறாத காலத்திலும் 100 சதவீதம் மின் கட்டணம் (Demand charges) விதிப்பது சரியல்ல.

8.10 மேலும், மேற்கூறிய விதிகள் மற்றும் வழக்குகள் பெற்ற தீர்வு சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும்போது தீ, வெள்ளப்பெருக்கு, பெருங்கொள்ளை நோய் போன்ற "Force Majeure" சூழ்நிலைகளில் மின் நுகர்வு தடுக்கப்பட்டாலோ பெறஇயலாவிட்டாலோ அப்போது த.நா.மின் வழங்கல் விதி 6(b)ன் படி மாத சிறும கட்டணம் 20 சதவீதம் மட்டுமே விதிக்கஇயலும்.

8.11 ஆகையால் மேற்கண்ட மேற்கோள்களின் அடிப்படையில் 24.3.2020 முதல் 16.5.2020 வரையிலான காலத்தில் மேல்முறையீட்டாளர் த.நா.மி. வழங்கல் விதி 6(b)-ன் அடிப்படையில் 20 சதவீதம் மின் சிறும கட்டணம் மட்டுமே செலுத்த கடமைப்பட்டவராவார். 17.5.2020 முதல் மின்இணைப்பு பெற்ற நாளது வரை வினியோக விதி 31(5)ன் அடிப்படையில் முழு மின் கட்டணமும் செலுத்தவேண்டும்.

**9.0 முடிவுரை:**

9.1 பத்தி 8–இல் கண்ட எனது கருத்துக்களின் அடிப்படையில், விண்ணப்பதாரர் 25.3.2020 முதல் 16.5.2020 வரை வழங்கல் விதி 6(b) அடிப்படையில் கணக்கிட்டு மேல்முறையீட்டாளர் அதிகப்படியாக செலுத்திய தொகையை இவ்வாணை கிடைக்கப்பெற்றதற்கு அடுத்தமாத மின்கணக்கீட்டில் சரிசெய்து வழங்கப்படவேண்டும் என ஆணையிடப்படுகிறது.

9.2 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை 15 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

**9.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 95/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:

1. திரு. M. சுப்பிரமணியன்,
தீப்தி பினிஷர்ஸ்,
257/2, குளத்துப்புதூர் (குளத்துக்கடை),
ஆரம்பப்பள்ளி எதிரில், மங்களம் ரோடு,
ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 687.

2. செயற்பொறியாளர்/ திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
EB அலுவலக வளாகம், குமார் நகர்,
அவிநாசி ரோடு, திருப்பூர் – 641 603.

3. உதவி செயற்பொறியாளர்/வீரபாண்டி,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV வீரபாண்டி SS வளாகம்,
திருப்பூர் – 641 605.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19A & 19B, ஜோதிநகர், PN ரோடு,
திருப்பூர் – 641 603.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.